**செய்தி வெளியீடு எண் : 1490** **நாள் : 29.08.2022**

**செய்தி வெளியீடு**

இன்று (29.08.2022) தலைமைச் செயலகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகள் மற்றும் அவற்றின் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களது தலைமையில் நடைபெற்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக வெளியிடப்பட்ட ஆளுநர் உரை, வரவு செலவுத் திட்ட உரைகளில் இடம்பெற்ற அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களால் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாணவ / மாணவியர் மற்றும் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இவ்வறிவிப்புகளை விரைவாக பயன்பாட்டிற்கு கொண்டுவரவும், மேலும், இத்திட்டங்களின் பயன் அவர்களை விரைந்து சென்றிடுவதை உறுதி செய்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்– திரு.தெ.சு.ஜவஹர், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நல இயக்குநர்–திருT.ஆனந்த்,இ.ஆ.ப., பழங்குடியினர் நல இயக்குநர்– திரு.S.அண்ணாதுரை ம.தொ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் – திரு.P.K.கந்தசாமி, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு கூடுதல் செயலாளர்– திரு.சு.பழனிசாமி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in